கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது / சிறப்புக் கலைமாணித் தேர்வு

2012 / 2013 (டிசம்பர் - 2017)

# 0HY 3233 Selected Themes from History of Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

## பகுதி - அ

01. தமிழ் நாட்டில் எழுச்சி பெற்ற சோழப்பேரரசு எவ்வாறு தமது ஆதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்டியது என்பதனை படிமுறையாக விளக்குக. (20 புள்ளிகள்)

02. முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக்கால பொலனறுவை நிர்வாகம் தொடர்பிலான மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    (அ) வாரிசு முறை
    (ஆ) திருமண உறவு
    (இ) ஆட்சிக்கொள்கை (20 புள்ளிகள்)

03. மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் கால முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.
    (அ) நிர்வாகம்
    (ஆ) வெளிநாட்டுக்கொள்கை
    (இ) பொருளாதார நடவடிக்கைகள் (20 புள்ளிகள்)

## பகுதி - ஆ

04. பொலனறுவைக்கால கட்டிட சிற்பக்கலை பற்றி பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

05. பொலனறுவைக்கால அரசியலில் பௌத்த சங்கம் செலுத்திய செல்வாக்கினை முதலாம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தை உதாரணமாகக் கொண்டு நுணுக்கமாக ஆராய்க. (20 புள்ளிகள்)

06. 'நிஜங்க மல்லன் இராஜரட்டையின் இறுதி மன்னன்' இக்கூற்றின் அடிப்படையில் அவனது ஆட்சிக்காலம் பற்றி மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

07. பொலனறுவைக்கால மன்னர்கள் ஏற்படுத்தியிருந்த வெளிநாட்டுத் தொடர்புகளை சுருக்கமாக ஆராய்க. (20 புள்ளிகள்)